மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

நி.ம.எண். 10/2019

நிமசா1

தேதி :- 10.12.2021

பெயர் :- சக்திவேல்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தேதி 10 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:

நான் 7 வருடமாக அகரம் பஞ்சாயத்தில் ஊராட்சி செயலராக உள்ளேன். எனக்கு அந்த ஊரில் உள்ளவர்கள் பெயர்கள் ஓரளவுக்கு தெரியும் என்றால் தெரியும். சாசாஆ1ல் கதவு எண்.168, 169, 170 எல்லாம் ஒன்று போல் சேர்ந்தனையாக தான் உள்ளது என்றால் சரிதான். கதவு எண்.169 யார் பெயரில் உள்ளது என்றால் த.வேலசுப்பிரமணியன் கதவு எண்.170 த.சிவசுப்பிரமணியன் பெயரில் உள்ளத. சிவசுப்பிரமணியன் மற்றும் வேலசுப்பிரமணியன் அப்பா பெயர் தங்கவேல் நாடார் என்றால் சரிதான். தங்வேல் நாடார் தகப்பனார் பெயர் நாராயணநாடார் என்றால் சரிதான். நாராயண நாடார் மனைவி பெயர் மங்களம் அம்மாள் என்றால் சரிதான். கதவு எண்.168 து.நாராயணன் பெயரில் உள்ளது. து.நாராயணன் நாடார் என்பது துரையப்பா நாடார் மகன் நாராயணன் நாடார் என்றால் இருக்கலாம் ஆனால் எனக்கு சரியாக தெரியவில்லை. துரையப்ப நாடார் தகப்பனார் பெயர் நாராயணநாடார் என்றால் சரியாக தெரியவில்லை. துரையப்பநாடாரும் தங்கவேல் நாடாரும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். கதவு எண்.176 து. நாராயண நாடார் பெயரில் உள்ளது. கதவு எண்.176 உள்ள வீட்டில் து.நாராயண நாடார் குடியுள்ளார் என்றால் நாராயண நாடார் குடியுள்ளார் ஆனால் அவர் தகப்பனார் பெயர் சரியாக தெரியவில்லை. கதவு எண்.176ல் உள்ள

*து.நாராயண நாடார் சென்னையில் குடியுள்ளார் என்றால் சரிதான். சாசாஆ2 எந்த ஆண்டுக்குரியது என்றால் 2008 - 2009 ஆண்டுக்குரியது. கதவு எண்.168 யார் பெயரில் உள்ளது என்றால்* N.*மங்களம்மாள் பெயரில் உள்ளது. கதவு எண்.168ல்* N.*மங்களம்மாள் பெயர் எந்த ஆவணத்தில் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. கதவு எண்.168 மங்களம்மாள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக தீர்மானம் எதுவும் எங்கள் அலுவலகத்தில் கிடையாது என்றால் சரிதான். சாசாஆ2ல் கதவு எண்.168 பெயர் ஒற்றுமையில் அடிப்படையில் தவறுதலாக* N. *மங்களம்மாள் பெயருக்கு வரி விதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாசாஆ3ல் கதவு எண்.168க்கு* N.*மங்களம் என்ற பெயர் வட்டமிட்டு* N.T.*சிவசுப்பிரமணியன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பெயர் மாற்றம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் சரிதான். சாசாஆ4 உத்தரவு நவீததுரை 13.3.2015ல் கொடுக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். இந்த உத்தரவில் நவீததுரை கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். சாசாஆ5, 6 நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தான் கதவு எண்.168க்கு மங்களம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ள தீர்வை மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சாசாஆ11* N.T.*சிவசுப்பிரமணியன் பதிவு துரை தலைவர் அவர்கள் சென்னை அனுப்பிய புகார் மனு என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்கும் எங்கள் அலுவலகத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சாசாஆ12க்கும் சமரச தீர்ப்பாணை எங்கள் அலுவலகத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் யார் கொடுத்தார்கள் என்று சாசாஆ12ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.*

*அனுமதியின் பேரில் மறு விசாரணை:*

*தங்கவேல் நாடார் தகப்பனார் பெயர் நாராயணநாடார் என்று எங்கள் ஆவணத்தில் துலங்குமா என்றால் அவர்கள் தீர்வை போட்டதால் தெரியும். நாராயணநாடார் மனைவி பெயர் தெரியாது. நாராயண நாடாருக்கு 3 பிள்ளைகள்*

மற்றும் எடுத்த ஒரு பிள்ளை மொத்தம் 4 பிள்ளைகள். எடுத்து வளர்ந்த பிள்ளை துரை என்று வரும் முழு பெயர் தெரியவில்லை. அவர் மகன் ˙பெயரும் நாராயணன் என்றால் சரிதான். நாராயண நாடார் மனைவி பெயர் மங்களம்மாள் என்றால் சரிதான். மங்களம்மாள் பெயரில் தீர்வை மாற்றும் போது அறிவிப்பு கொடுத்தோமா என்றால் தெரியாது.

ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.